# குழந்தை பிறந்த முதல் ஆறு ஆண்டுகளில் பொறுப்புள்ள பெற்றோராதல்: உரிமையும் கடமையும்

அருள்பணி. அ. அலெக்ஸ் ஞான ராஜ் MA, MSW, MCL
மதுரை உயர்மறைமாவட்டம்

## முன்னுரை

“திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பபடுகின்றன; ஆனால், மணமக்கள் அதை நரகமாக்குகிறார்கள்!” என்பது நகைச்சுவைக்காக சொல்லப்பட்டாலும், அதுவே வேதனை கலந்த உண்மையாகவும் இருக்கிறது. “மணமக்கள் ஒருவர் மற்றவர்க்கு தங்களையே கையளித்தல், அன்பு செய்தல், குழந்தைகளைப் பெற்று வளர்த்தல்” என்பவைதான் கிறிஸ்தவ திருமணத்தின் நோக்கமாக இருக்கிறது. ஆனால், இதைப் புரிந்துகொண்டு, இந்த நோக்கம் நிறைவேறுவதற்காக வாழ்வோர் ஒரு சிலரே. இவை மூன்றாகச் சொல்லப்பட்டாலும், உண்மையில் அவை ஒன்றை ஒன்று சார்ந்தவயாக, ஒன்றோடொன்று தொடர்புடையதாகவே இருக்கிறது. திருச்சபைச் சட்டமோ “மணமக்களின் நலன், மகப்பேறு மற்றும் குழந்தை வளர்ப்பு” என்று இன்னும் சுருக்கமாகச் சொல்கிறது; ஆனால், இவற்றில் மறைந்துள்ள உண்மைகள் பெரிது. திருமண முன் தயாரிப்பு வகுப்புகள் (குருத்துவ அருளடையாளத்திற்கு 12 ஆண்டுகளுக்கு மேல் தயாரிப்பு, ஆனால் திருமண அருளடையாளத்திற்கு இரண்டு அல்லது மூன்று நாட்களே தயாரிப்பு என்பது மிகக் குறைவே, என்றாலும்...) மற்றும் தயாரிப்பு ஏடுகள் ஓரளவிற்கு கிறித்தவ திருமணத்தின் நோக்கத்தை விளக்கினாலும், பெரும்பாலும் திருமணத்திற்கு முன் கவனிக்கவேண்டியவை குறித்தே அதிகமாக பேசுகின்றன. தாம்பத்தியம், கர்ப்பகாலம், மகப்பேற்றுக் காலம் இவற்றில் கவனிக்கப்பட வேண்டிய மருத்துவ மற்றும் பாதுகாப்பு வழிமுறைகளைப் பற்றியே பேசுகின்றன. மேலும், அனைத்தையும் முழுமையாக ஒரே நூலாக வெளியிடுவதும் சாதாரண காரியமல்லவே. ஆக, ஏற்கனவே உள்ள திருமண தயாரிப்பு ஏடுகளின் தொடர்ச்சியாக, மணமக்களுக்கு இடையே நிலவவேண்டிய அன்புறவும், அது குழந்தைகளின் ஆளுமையில் ஏற்படுத்தக்கூடிய மாற்றங்களைக் குறித்தும் சுருக்கமாக, உளவியல் பூர்வமாக இக்கட்டுரையில் சொல்லப்படுகிறது.

மகப்பேறு மற்றும் குழந்தை வளர்ப்பு என்பதுமே மிகப்பெரிய, உட்டலியல், உயிரியல், உளவியல், கல்வி, ஆன்மீகம், சமூகம், ஆரோக்கியம் என பல கூறுகள் கலந்த சிக்கலான ஒன்று ஆனால் அவசியமான ஒன்றும் கூட. மனித உடல் ஒரு அற்புதம் என்றால், மனித வாழ்வும் ஒரு அற்புதம். மனித வளர்ச்சியின் ஒவ்வொரு படி நிலைகள் குறித்தும் நூல் தொகுப்புகளே எழுதலாம்; எழுதப்பட்டும் இருக்கின்றன. அவற்றில், தம்பதிகள், முதல் முறையாகப் பெற்றோராக மாறுபவர்கள் கவனிக்க வேண்டிய எளிய உளவியல் நுணுக்கங்கள் மட்டுமே இங்கு சொல்லப்படுகின்றன, அவையும் திருஅவை அவர்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறது என்ற பின்னணியில் சொல்லப்படுகின்றன. “தொடடில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்” என்று சொல்வார்கள். ஒரு குழந்தை முதல் ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளில் என்ன கற்றுக்கொள்கிறதோ அதையே பின்னாளில் வளர்த்தெடுக்கிறது என்பது உளவியல் உண்மை. இந்த ஆறு ஆண்டுகளில் பெற்றோர்களே அதன் முதல் ஆசிரியர்களாகவும் இருக்கிறார்கள். எனவேதான் குழந்தை பிறந்த முதல் ஆறு ஆண்டுகளில் பொறுப்புள்ள பெற்றோராதல் எனும் இத்தலைப்பு தெரிவுசெய்யப்பட்டுள்ளது. பொறுப்புள்ள பெற்றோராதல் குறித்த விவிலிய மற்றும் திருஅவை பின்னணியை முதல் பகுதியிலும், உளவியல் கூறுகளை இக்கட்டுரையின் இரண்டாவது பகுதியிலும் பார்க்கலாம்.

# 01. பொறுப்புள்ள பெற்றோர்

## 1.1. விவிலியத்தில்

திருமண வாழ்வு மற்றும் திருமண பந்தத்தினால் உருவாகும் நெருங்கிய உறவுச் சமூகம் இவற்றை படைப்பின் தொடக்கத்திலேயே இறைவன் ஏற்படுத்தி இருக்கிறார். கடவுள் மனிதரைப் படக்கும் பொழுதே "ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்" (தொ.நூ.1:27) என்றும், "இதனால் கணவன் தன் தாய் தந்தையை விட்டுவிட்டுத் தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான்; இருவரும் ஒரே உடலாய் இருப்பர் (தொ.நூ.2:24)," என்கிறது விவிலியம். இத்தகைய நெருங்கிய உறவுச் சமூகத்திற்காக மனிதர்களைப் படைத்த இறைவன், அவர்களைப் "பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள்; அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள் (தொ.நூ.1:28)" என்று தனது ஆசியையும் வழங்கியுள்ளார். எனவே, திருமணம் மற்றும் குழந்தைப் பேறு என்பது படைப்பின் தொடக்கத்திலிருந்தே இறைவன் ஏற்படுத்திய அமைப்பு மற்றும் வழங்கிய கொடை என்பது தெளிவாகும். "ஒருவன் ஒரு பெண்ணைப் புதிதாக திருமணம் செய்திருந்தால், அவன் போருக்குப் போக வேண்டாம். அவன்மீது யாதொரு பொறுப்பும் சுமத்தப்படலாகாது. அவன் ஓராண்டுகாலம் எவ்வித இடையூறுமின்றி தன் வீட்டில் இருந்துகொண்டு தன் மனைவியை மகிழ்விப்பான் (இ.ச.24:5) எனும் பண்டைய சட்டம் மணமக்களுக்கிடையேயான தனிப்பட்ட அன்புறவை உறுதிப்படுத்துவதாக அமைகிறது.

புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்குமான உறவுடன் மணமக்களுக்கு இடையேயான உறவு ஒப்பிட்டு சொல்லப்படுகிறது. "கிறிஸ்து திருச்சபைக்குத் தலையாய் இருப்பது போலக் கணவர் மனைவிக்கு தலையாய் இருக்கிறார் (எபே.5:23)" என்றும், திருச்சபை கிறிஸ்துவுக்குப் பணிந்திருப்பது போல, மனைவியரும் தங்கள் கணவருக்கு பணிந்திருக்க வேண்டுமென்றும், திருமணமான ஆண்கள், கிறிஸ்து திருச்சபைமீது அன்பு செலுத்தியது போல தங்கள் மனைவியை அன்பு செலுத்த வேண்டும் (காண்.: எபே.5:24-25) என்றும் கூறுகிறது. எப்படி கிறிஸ்துவையும் திருச்சபையையும் பிரிக்க முடியாதோ அதுபோல கணவனையும் மனைவியையும் எதுவும் பிரிக்க முடியாதபடியிலான அன்பில் பிணைந்திருக்க திருத்தூதர்கள் பணிக்கிறார்கள். இவ்வாறு, ஆண்டவருக்கு பிடித்ததும், ஆண்டவர் முன்னும் மனிதர் முன்னும் அழகுள்ளவைகளில் ஒன்றானதுமாக தங்களுள் ஒன்றி வாழும் கணவன் மனைவியர் வைக்கப்படுகின்றனர் (காண். சீராக் 25:1).

கணவன் மனைவி அன்பைக் கூறுகின்ற அதேவேளையில், "தந்தையரே, உங்கள் பிள்ளைகளுக்கு எரிச்சல் மூட்டாதீர்கள். மாறாக அவர்களை ஆண்டருக்கேற்ற முறையில் கண்டித்து திருத்தி, அறிவு புகட்டி வளர்த்துவாருங்கள் (எபே.6:4)" என்று பெற்றோருக்குரிய கடமைகளையும் நினைவுபடுத்துகிறார்கள். "உனக்கு பிள்ளைகள் இருந்தால் அவர்களுக்கு நற்பயிற்சி அளி; இளமைமுதலே பணிந்திருக்கச் செய்," என்கிறது சீராக்கின் ஞானம் (7:23, 30:13). "தம் மகனிடம் அன்பு கொண்டிருக்கும் தந்தை அவனை இடைவிடாது தண்டிப்பார் (சீ.ஞா.30:1)" என்றும், "கட்டுப்பாடில்லாத மகன் அடக்கமற்றவன் ஆகின்றான் (சீ.ஞா.30:8)" என்றும் கூறுகிறது.

கற்றல் கருவிலிருந்தே தொடங்குகிறது என்பதையும் விவிலியம் உணர்த்தாமலில்லை. "கருப்பையிலிருந்தே உம்மைச் சார்ந்திருந்தேன்; நான் என் தாயின் வயிற்றில் இருந்தது முதல் என் இறைவன் நீரே! (திபா.22:10)," என திருப்பாடலும்; "...அது இறைப்பற்றுள்ளோருக்கு தாய் வயிற்றிலிருக்கும்பொழுதே வழங்கப்படுகிறது (சீராக் 1:14)," என சீராக்கின் ஞானமும் கூறுகிறது. "உம் வாழ்த்துரை என் காதில் விழுந்ததும் என் வயிற்றினுள்ளே குழந்தை பேருவகையால் துள்ளிற்று (லூக்.1:41-44)," என்ற எலிசபெத்தின் கூற்று கருவில் வளரும் குந்தையின் கவனிக்கும் ஆற்றலை மெய்ப்பிக்கிறது. "ஆனால், தாயின் வயிற்றில் இருந்தபோதே என்னைத் தமக்கென ஒதுக்கிவைத்துத் தமது அருளால் என்னை அழைத்த கடவுள்... (கலா.1:15)," என புனித பவுலும் இதற்கு சான்று பகர்கிறார். இவ்வாறு, மணமக்கள் அன்பு, ஒன்றிப்பு, குழந்தைப்பேறு மற்றும் வளர்ப்பு குறித்து விவிலியம் ஆழமாக பேசுகிறது.

## 1.2. இரண்டாம் வத்திக்கான் சங்கம்

“கடந்த ஐநூறு ஆண்டுகளின் மிகவும் கவனிக்கத்தக்க சமய நிகழ்வு, கத்தோலிக்க திருஅவையை மாற்றியமைத்த மாபெரும் நிகழ்வு,” என்று கத்தோலிக்க வரலாற்று அறிஞர் ஏமன் டூ.ஃபி அவர்களால் மட்டுமல்ல உலக மற்றும் திருஅவையின் பல்வேறு தரப்பினராலும் பாராட்டப்பட்டது அக்டோபர் 11, 1962-இல் கூட்டப்பட்ட இரண்டாம் வத்திக்கான் சங்கம். உலகெங்கிலுமிருந்தும் இரண்டாயிரத்து அறுநூறு ஆயர்கள், நவீன யுகத்தில் திருஅவையை மீட்டுருவாக்கம் செய்ய, ஏறக்குறைய மூன்றாண்டுகளாக உரோமையில் ஒன்று கூடியதன் விளைவாக திருவழிபாடு, திருஅவை, இறைவெளிப்பாடு, இன்றைய உலகில் திருஅவை என்பன போன்ற 16 ஏடுகள் வெளியிடப்பட்டன. இவற்றில் இன்றைய உலகில் திருஅவை மற்றும் கிறித்தவக் கல்வி ஆகியவை திருமணம், மகப்பேறு மற்றும் குழந்தை வளர்ப்பு குறித்த படிப்பினைகளைத் தருகின்றன.

இன்றைய உலகில் திருச்சபை (*Gaudium et Spes*) எண்கள் 46 முதல் 52 வரை திருமணம் மற்றும் குடும்பத்தின் மாண்பைப் பேணி வளர்த்தல் பற்றி பேசுகிறது. “திருமண வாழ்வு மற்றும் திருமண அன்பினால் உருவாகும் உறவுச் சமூகத்தைப் படைப்பின் கடவுள் ஏற்படுத்தினார்; அதற்குரிய ஒழுங்கமைப்புகளையும் அவரே அளித்தார்; இந்த உறவுச் சமூகம் திருமண உடன்படிக்கையில், அதாவது ஆள்நிலை சார்ந்ததும் பின்வாங்கக் கூடாததுமான இசைவின்மேல் கட்டி எழுப்பப்படுகிறது. ...திருமன அமைப்பும் திருமண அன்பும் தம் இயல்பிலேயே பிள்ளைகளைப் பெற்றுப் பயிற்றுவிப்பதற்கு என அமைந்துள்ளன; பிள்ளைகளே ஒருவிதத்தில் அவற்றின் மணிமகுடமாகவும் அமைகின்றனர். ...ஒருவருக்கொருவர் இரு மனித ஆள்கள் தங்களையே கொடையாக அளித்தலாகிய இந்த நெருக்கமான ஒன்றிப்பும், அஃதோடு குழந்தைகளின் நலனும் மணமக்கள் ஒருவருக்கொருவர் முழுமையான விதத்தில் உண்மையுடையவர்களாகச் செயல்படக் கோருகின்றன; அவர்களின் முறிவுபடவியலா ஒன்றிப்புநிலையின் தேவையை வலியுறுத்துகின்றன. ...இப்படியாக, குடும்ப இறைவேண்டலாலும் முன்மாதிரியாலும் பெற்றோர்கள் வழிநடத்திச் செல்ல, பிள்ளைகள், ஏன் குடும்ப வட்டத்தில் கூடி வாழும் எல்லோருமே, மனித முதிர்ச்சி, மீட்பு, தூய்மை ஆகியவற்றிற்கான வழியை அதிக எளிதாகக் கண்டுபிடிப்பார்கள்.” (இ.உ.தி.48).

“திருமண அன்பு திருமணத்திற்கே உரிய தாம்பத்திய உறவில் சிறப்பான முறையில் வெளிப்படுத்தப்படுகிறது; முழுமையடைகிறது. ...கிறிஸ்தவ மணமக்கள் திருமண அன்பில் தங்களின் நம்பகப் பண்பிற்கும் உள ஒற்றுமைக்கும் சாட்சிகளாய் இருந்து, தங்கள் குழந்தைகளைப் பயிற்றுவிப்பதில் ஆழ்ந்த அக்கறை காட்டவேண்டும்; திருமணம், குடும்பம் ஆகியவற்றின் மேம்பாட்டுக்குத் தேவையான பண்பாட்டு, உளவியல், சமூகச் சீர்திருத்தங்களில் தங்களின் பணியைச் செய்ய வேண்டும்; கிறிஸ்தவ மணமக்கள் இவ்வாறு செயல்படுவார்களேயானால் உண்மையான திருமண அன்பின் மதிப்பு வளர்ந்தோங்கும்; அது பற்றிப் பொதுமக்களிடம் நல்லெண்ணம் உண்டாகும்.” (இ.உ.தி.49).

“திருமணமும் திருமண அன்பும் தம்மியல்பிலேயே பிள்ளைகளைப் பெற்று அவர்களப் பயிற்றுவிப்பதற்கென்று அமைக்கப்பட்டுள்ளன. உண்மையிலே குழந்தைகள் திருமணத்தின் மிகச் சிறந்த கொடையாக இருப்பதுடன், பெற்றோரின் நலனுக்கும் அவர்கள் பெரிதும் உதவுகின்றனர். ... மனித உயிர் அளித்துக் குழந்தைகளுக்கு பயிற்சியளிக்கும் கடமையை மணமக்களுக்கே உரித்தான பொறுப்பாகக் கருத வேண்டும்; இப்பணியை ஆற்றுவதில் தாங்கள் படைத்த கடவுளின் அன்போடு ஒத்துழைப்பவர்களாய், ஒருவிதத்தில் அவ்வன்பின் பொருளை விளக்கி உரைப்பவர்களாய் இருக்கிறார்கள் என்பதை மணமக்கள் அறிந்துள்ளார்கள். ஆகவே, அவர்கள் தங்களின் இப்பணியை மனித மற்றும் கிறிஸ்தவ பொறுப்புடன் நிறைவேற்ற வேண்டும்... தங்களின் நலத்தைக் கருதுவதுடன் தங்களுக்கு ஏற்கனவே பிறந்துள்ள, மற்றும் வருங்காலத்தில் பிறக்கப்போவதாக எதிர்பார்க்கின்ற குழந்தைகளின் நலத்தையும் கருதவேண்டும்... இருப்பினும், திருமணம் பிள்ளைப் பேற்றுக்காக மட்டும் ஏற்படுத்தப்பட்டதல்ல. மாறாக, மணமக்கள் ஒருவர் ஒருவர் பால் கொள்ள வேண்டிய அன்பும் சரியான

முறையில் காட்டப்பட வேண்டும், வளர்ந்து முதிர்ச்சியடைய வேண்டும்; ... ஆகவே, மணமக்கள் பெரும்பாலும் விருப்போடு எதிர்பார்க்கும் மக்கள்பேறு கிடைக்காமல் போயினும் கூட திருமணம் வாழ்க்கை முழுவதும் தழுவிய சமூகமாகவும் உறவு ஒன்றிப்பாகவும் நிலைத்து நிற்கிறது; தனது மதிப்பையும் பிளவுபடாத தன்மையையும் கொண்டு நிலைக்கிறது." (இ.உ.தி.50)

"...உயிரின் ஆண்டவராகிய கடவுள் உயிரைக் காக்கும் உயரிய பணியை மனிதரிடத்தில் ஒப்படைத்துள்ளார்; இப்பணியை மனிதத்தன்மைக்கு ஏற்ற முறையில் நிறைவேற்ற மனிதர் கடமைப்பட்டுள்ளனர். ஆகவே, கருவானதிலிருந்து உயிரை மிகக் கவனத்துடன் பாதுகாக்க வேண்டும்... (இ.உ.தி.51) ...குழந்தைகள் முதிர் வயது அடைந்ததும் தங்கள் அழைப்பை, துறவற அழைப்பையும் கூட, முழுக் கடமை உணர்வுடன் பின்பற்றவும் தங்கள் வாழ்க்கை நிலையைத் தேர்ந்துகொள்ளவும் இயலும் வகையில் அவர்களைப் பயிற்றுவிக்க வேண்டும்..." (இ.உ.தி.52).

கிறிஸ்தவக் கல்வி (*Gravissimum Educationis*) எண் 3-இல் கல்வி அளிக்கப் பொறுப்புள்ளவர்கள் பட்டியலில் பெற்றோரை முதல் ஆசிரியராக முன்வைக்கிறது. "பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்கு உயிர் அளித்திருக்கிறார்கள் என்பதால் பிள்ளைகளுக்கு கற்பிக்க வேண்டியது அவர்களது தலையாய கடமை. எனவே, அவர்களே குழந்தைகளின் முதன்மையான, முக்கியமான ஆசிரியர்கள் என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். பெற்றோர் அளிக்க வேண்டிய இக்கல்விப்பணி எவ்வளவு முக்கியமானதென்றால் அவர்கள் அதை அளிக்காமல் போனால் வேறெதுவாலும் அதை நிறைவு செய்வது மிகக் கடினம். தாய் தந்தையர் தங்களுடைய குழந்தைகள் முழுமையானதொரு கல்வியை அடைந்திடச் சாதகமான குடும்பச் சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். இச்சூழ்நிலையானது கடவுள் மட்டிலும் மனிதர் மட்டிலும் காட்டப்படவேண்டிய அன்பு, மதிப்பு ஆகியவற்றால் உயிரூட்டம் பெற்றதாக அமைதல் வேண்டும். எனவே, குடும்பம்தான் ஒவ்வொரு சமுதாயத்திற்கும் தேவையான சமூக நற்பண்புகளின் முதற்பள்ளியாகும்."

## 1.3. திருந்தந்தையர்களின் திருத்தூதுரைகள்

திருத்தந்தை 11-ஆம் பயசின் "திருமணம்" (*Casti Connubii* – 31.12.1930) எனும் சுற்று மடலானது தம்பதிகளிடையே நிலவவேண்டிய நிரந்தர உடனிருத்தலுக்கான பரஸ்பர கண்ணியம் மற்றும் மரியாதையின் அவசியத்தை வலியுறுத்துகிறது. திருமணத்தின் பயன்களான மகப்பேறு, தாம்பத்திய நம்பகத்தன்மை மற்றும் அருளடயாள தன்மை குறித்தும், திருமணம் பற்றிய தவறான புரிதல்கள், அவற்றிலிருந்து வெளிவரவதற்கான திர்வுகள் குறித்தும் பேசுகிறது.

திருத்தந்தை ஆறாம் பவுலின் "மனித வாழ்க்கை" (*Humanae vitae* - 25.07.1968) எனும் சுற்று மடல் திருமண அன்பு மற்றும் குழந்தை வளர்ப்பு குறித்த நவீன உலகின் பல்வேறு கேள்விகளுக்கு பதிலளிப்பதாய் உள்ளது. இறைவனே வாழ்வின் ஊற்று என்றும், அவர் படைத்த அனைத்தும் தூயது என்றும், திருமண வாழ்வில் மகப்பேற்றின் அவசியம் குறித்தும் அதனால் உயரும் பெண்களின் மாண்பு குறித்தும், இயற்கை மற்றும் செயற்கை முறை குடும்ப கட்டுப்பாடுகள் குறித்தும் விவரிக்கிறது.

திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் அவர்களின் "நவீன உலகில் கிறிஸ்தவ குடும்பம்" (*Familiaris Consortio* - 22.11.1981) எனும் திருத்தூது அறிவுரையில் இறைத்திட்டத்தின் படி குடும்பம் எனும் பரந்த குழுமத்தின் அடித்தளமாக திருமணம் அமைகிறது. மேலும், திருமணம் மற்றும் அன்புறவு இவை மகப்பேறு மற்றும் பயிற்றுவித்தலுக்காக அமைக்கப்பட்டுள்ளன. ஏனெனில், குழந்தைகளே அவர்களின் மணிமகுடமாகத் திகழ்கிறார்கள். மணமக்கள் பெற்றோராகும் பொழுது, புதிய பொறுப்புகளுக்கான அருட்கொடையை இறைவனிடமிருந்து பெறுகிறார்கள். பெற்றோர்களின் அன்பு பிள்ளைகளுக்கு இறையன்பின் காணக்கூடிய அடையாளங்களாக உள்ளன. இறைவனிடமிருந்தே விண்ணிலும் மண்ணிலும் அனைத்து குடும்பங்களும் பெயரிடப்படுகின்றன. மகப்பேறு நிகழ முடியா சூழலில் கூட அன்புறவு தனது மதிப்பை இழப்பதில்லை, ஏனெனில் மலட்டுத்தன்மையானது மணமக்களுக்கு

தத்தெடுத்தல், கல்விக்கு உதவுதல், ஏழை மற்றும் குறைபாடுடைய குழந்தைகளுக்கு உதவுதல் போன்ற மிக முக்கிய சேவைகளில் ஈடுபட வாய்ப்பாக அமைகிறது. மேலும், திருமணமும் கிறிஸ்தவ குடும்பமும் திருஅவையைக் கட்டி எழுப்புகின்றன. ஏனெனில், குடும்பத்தில் மனித ஆள் என்பவர் உரு கொடுக்கப்படுவதோடு பயிற்றுவித்தல் வழியாக மனித இனத்திற்கு வளர்ச்சிப்பாதையில் அறிமுகம் செய்யப்படுகிறார். திருமுழுக்கு எனும் மறுபிறப்பு மற்றும் மறைக்கல்வி வழியாக குழந்தையானது கடவுளின் குடும்பமாகிய திருஅவைக்கு அறிமுகமாகிறது என்று அன்புறவு, குழந்தைப் பேறு மற்றும் கல்வியளித்தலின் அவசியத்தை உணர்த்துகிறார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும் தனது "அன்பின் மகிழ்ச்சி" (*Amoris Laetitia* – 19.03.2016) எனும் திருத்தூது அறிவுரை வழியாக திருமணம் மற்றும் குடும்ப வாழ்வு பற்றிய திருஅவையின் போதனைகளை மீண்டும் வலியுறுத்துகிறார். குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் நல்ல கிறிஸ்தவ வாழ்வு வாழ ஊக்கப்படுத்தப்பட வேண்டும் குறிப்பாக திருமணம் என்பது மாறிக்கொண்டே இருக்கும் செயல்முறை, எல்லா பக்கங்களிலும் நேர்த்தியற்ற நிலைகள் சரிசெய்யப்பட வேண்டும் என்பதை திருமணமான தம்பதிகளுக்கு நினைவூட்டுகிறார். "நாம் அன்பை மதிப்பீடு செய்ய அது நேர்த்தியானதாக இருக்கவேண்டியதில்லை (113, 122)," எனவும் கூறுகிறார். குழந்தைகளுக்கான கல்வியைப் பற்றி பேசுகிற பொழுது 'பால்' மற்றும் பாலியல் கல்வியும் குழந்தைகளுக்கு கொடுக்கப்பட வேண்டும். குறிப்பாக, பாலுணர்வை தரக்குறைவாகவோ அல்லது வியாபார நோக்குடனோ பார்க்கும் கலாச்சாரத்தில் "அது அன்பிற்கும், ஒருவர் ஒருவருக்கு தற்கையளிப்பிற்குமானது என்ற பரந்துபட்ட பயிற்றுவித்தலையும் (280)" குழந்தைகள் புரிந்துகொள்ள வேண்டும் என்கிறார். 'உடல் பயன்பாட்டுக்குரிய பொருளாக (153)' மட்டும் பார்க்கப்படுவது வருத்தத்திற்குரியது; 'பால்' புது வாழ்வு எனும் கொடையைப் பெறுவதற்கான திறப்பு நிலை என்பதை எப்போதும் புரிந்துகொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

## 1.4 திருச்சபைச் சட்டம்

> **தி.ச.1055 §1. திருமண உடன்படிக்கையால், ஓர் ஆணும் ஒரு பெண்ணும் தங்கள் வாழ்வு முழுவதற்குமான ஓர் உறவுச்சமூகத்தைத் தங்களிடையே ஏற்படுத்துகின்றனர்; இவ்வுடன்படிக்கை, தன் இயல்பிலே மணமக்களின் நலனுக்காகவும் மகப்பேறு மற்றும் குழந்தை வளர்ப்புக்காகவும் அமைந்துள்ளது; இது திருமுழுக்குப் பெற்றவர்களிடையே ஓர் அருளடையாள மாண்பிற்கு ஆண்டவராகிய கிறிஸ்துவால் உயர்த்தப்பட்டுள்ளது.**

திருச்சபைச் சட்டத்தொகுப்பு(1917), தி.ச.1013 திருமணத்திற்கான பலன்களை 'முதலாவது, இரண்டாவது' என படிநிலை அமைப்பாக பார்க்கிறது. இரண்டாம் வத்திகான் சங்க ஏடு 'இன்றைய உலகில் திருச்சபை'-யினால் உந்தப்பட்ட தற்போதைய திருச்சபைச் சட்ட தொகுப்பானது(1983) மணமக்களின் நலன், மகப்றேு மற்றும் குழந்தை வளர்ப்பை ஒரே நிலையில் வைத்துப் பாக்கிறது. இவையே கிறித்தவ திருமணத்தின் அடிப்படை இயல்பாக இருக்கிறது. விவிலியப் பின்னணியிலான 'உடன்படிக்கை' வழியாக மணமக்கள் ஒருவர் மற்றவருக்கு தங்களையே அர்ப்பணிக்கிறார்கள். தம்பதியில் ஒருவர் மட்டுமோ அல்லது இருவருமோ தங்களின் ஒப்புதலை விலக்கிக் கொண்டாலும் இந்த உடன்படிக்கை உறவு இல்லாமல் போவதில்லை. மேலும், தம்பதிகளின் இத்-தற்கையளிப்பானது அனுதின நிகழ்வாக அமைந்து 'வாழ்நாள் முழுவதற்குமான உறவுச்சமூகம்' எனும் உடன்படிக்கையின் குறிக்கோளை உண்மையாக்க வேண்டும். உறவுச்சமூகம் அமைப்பதற்கான மனநிலை மற்றும் செயல்பாடுகள் எவை எனும் பட்டியல் மிக நீண்டதாக அமைகிறது. இருப்பினும், பால்கவர்ச்சியோடு கொண்ட தோழமை, ஆள் சார்ந்த நட்புறவு, ஆன்மீக மற்றும் பொருளாதார ஆதரவு ஆகியவை குறிப்பிடத்தக்கவை ஆகும்.

இவ்வாறு, திருமண உறவுச்சமூகமானது இறைவனின் படைப்புச் செயலோடு இயல்பிலேயே ஒத்துழைப்பதாகிறது. இந்த ஒத்துழைப்பு வெறுமனே மகப்பேற்றில் மட்டுமல்லாமல் குழந்தைகளின் மனித மற்றும் கிறிஸ்துவ உருவாக்கத்தின் வழியாகவும் நடைபெறுகிறது. குழந்தைகள் இறையன்பையும் பிறரன்பையும் முதலில் குடும்பத்தில், பெற்றோர்களின் அன்பின் முன்மாதிரி மற்றும் பயிற்றுவித்தலில் கற்றுக்கொள்கின்றனர்.

> **தி.ச.1136. பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளின் உடல், சமூக, கலாச்சார மற்றும் அறநெறி, சமயம் சார்ந்த வளர்ப்பில் தங்களால் இயன்ற அனைத்தையும் செய்யவேண்டிய சீர்மிகு கடமையையும் முதன்மையான உரிமையையும் கொண்டுள்ளனர்.**

திருமணத்தில் இணையும் தம்பதிகள் அத்திருமணத்தின் பயனாகப் பிறக்கின்ற குழந்தைகளை முறையாக வளர்த்தெடுப்பதற்கான கடமைகளையும் பெறுகிறார்கள். ஏனெனில், திருமண வாழ்வு என்பது மணமக்களின் நலனை மட்டுமல்ல, மகப்பேற்றையும், குழந்தை வளர்ப்பையும் உள்ளடக்கியதாகவே இருக்கிறது. இப்பொறுப்பிலிருந்து யாரும் தங்களை விலக்கிக்கொள்ள இயலாது. குழந்தை வளர்ப்பு என்பது மனித மற்றும் கிறிஸ்தவ இயல்புக்குரிய எல்லாவற்றிலும் வளர்த்தெடுப்பதாகும். மணமக்களிடையே துலங்கும் தன்னலமற்ற அன்பு குழந்தைகளுக்கு இரக்கத்தின் பொருளை உணர்த்துகிறது. ஆன்மீகப் பயிற்சியானது திருமுழுக்கில் தொடங்கி, நம்பிக்கை வாழக்கைமுறையைப் பகிர்வதிலும், கிறிஸ்தவக் கல்வி புகட்டுவதிலும் முழுமையடைகிறது. இது கடமையாக மட்டுமல்லாது யாராலும் பறித்துக்கொள்ளவோ தடைசெய்யவோ முடியாத உரிமையாகவும் இருக்கிறது.

மேற்கண்டவைகயோடு பெற்றோர்கள் குழந்தைகள் பால் கொண்டுள்ள உரிமைகளையும் கடமைகளையும் எடுத்துக் கூறும் பிற திருஅவைச் சட்டங்களும் உள்ளன. அவை முறையே: தி.ச.793 - கல்வியளித்தல், குறிப்பாக கிறிஸ்தவ கல்வி அளித்தல்; தி.ச.797 – பள்ளிகளைத் தெரிவு செய்தல்; தி.ச.798 – கத்தோலிக்க பள்ளிகளைத் தெரிவுசெய்தல்; தி.ச.867 – திருமுழுக்கு அளித்தல்; தி.ச.890 – உறுதிபூசுதல் பெற தயாரித்தல்; தி.ச.914 – ஒப்புரவு மற்றும் புனித நற்கருணை பெற தயாரித்தல் ஆகியவையாகும்.

# 02. மகப்பேறும் பயிற்றுவித்தலும்

## 2.1. வளர்ச்சியியல் கோட்பாடுகள்:

மனித வளர்ச்சி என்பது உடல் வளர்ச்சியை மட்டும் குறிப்பதல்ல. மாறாக, உடல், உள்ளம், அறிவு, ஆன்மிகம் என ஒட்டுமொத்த வளர்ச்சியே உண்மையான வளர்ச்சியாகும். (பழைய பாடல் ஒன்று: ‘ஆளும் வளரனும் அறிவும் வளரனும் அதுதான்டா வளர்ச்சி’ என்கிறது.) உளவியலார் கூற்றுப்படி ஒருவர் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் அந்த நிலைக்கே உரிய வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றுவதற்கான ஆற்றலை(திறன்) அல்லது உத்திகளைக் கற்றிருக்க வேண்டும், அதுவே வளர்ச்சி ஆகும். இத்திறன்கள் உயிரியல் (biological) சார்ந்ததாகவோ, உடற்கூறியல் (physiological) சார்ந்ததாகவோ, உளவியல் சார்ந்ததாகவோ (Psycological) அல்லது கலாச்சாரம் (cultural) சார்ந்ததாகவோ இருக்கலாம். குறிப்பிட்ட நிலையில் தேவையான திறனைக் கற்றுக்கொள்ள தவறுகிறபொழுது அது குறைபாடாகப் பார்க்கப்படுகிறது. சில குறைபாடுகள் சரிசெய்யப்படலாம், சில குறைபாடுகள் இயல்பிலேயே சரிசெய்ய முடியாததாகிறது. பல்வேறு உளவியல் அறிஞர்களும் பல்வேறு விதமான ஆளுமை வளர்ச்சியல் கோட்பாடுகளைக் கொடுத்துள்ளனர். எலிசபெத் ஹர்லாக் மனித வாழ்வை பத்து நிலைகளாகப் பிரித்துப்பார்க்கிறார். அவை முறையே: 1) கரு நிலை (Prenatal), 2) பச்சிளம் பருவம் (Infancy), 3) மழலைப் பருவம் (Babyhood), 4) முன்-குழந்தைப்

பருவம் (Early Childhood), 5) பின்-குழந்தைப் பருவம் (Late Childhood), 6) பூப்புப்பருவம் (Puberty), 7) பதின் பருவம் (Adolescence), 8) முன்-வயதுவந்த பருவம் (Early Adulthood), 9) மத்திய வயதுப் பருவம் (Middle Age) மற்றும் 10) முதுமைப் பருவம் (Old Age). சிக்மண்ட் பிராய்டு 1) வாய்வழி இன்பப்பருவம் (Oral), 2) ஆசனவாய் இன்பப்பருவம் (Anal), 3) குறி இன்பப்பருவம் (Phallic), 4) உள்ளுறை இன்பப்பருவம் (Latency) மற்றும் 5) பால் இன்பப்பருவம் (Genital) என் ஐந்து நிலையாகப் பிரிக்கிறார். இன்னும் எரிக் எரிக்சன் Id – Ego – Super Ego எனும் 'ஆளுமைப் பண்புகளாகவும்' (Ego Qualities), ஆபிரகாம் மாஸ்லோ உலகத் தேவைகள், உளவியல் தேவைகள் என 'தேவைகளின் படிநிலையாகவும்' (Hierarchy of Needs) மனித வளர்ச்சியைப் பகுத்துப் பார்க்கின்றனர். தேவைகளின் படிநிலையாவன: 1) உடலியல் தேவைகள் (உணவு, உடை, உறைவிடம்), 2) பாதுகாப்புத் தேவைகள் (உடல்நலம், தொழில், ஒழுக்கம்), 3) சமூகத் தேவைகள் (நட்பு, காதல், குடும்பம்), 4) கௌரவத் தேவைகள் (மரியாதை, கௌரவம், சாதனை) மற்றும் 5 தன் உணர்வுத் (பிரச்சனைகளுக்கு தீர்வு, எதார்த்தத்தை ஏற்றல்) தேவைகளாகும். இதில் ஆறாவதாக தன்னைக் கடக்கும் நிலை என்று உளவியலார்கள் கூறுகிறார்கள். தேவையிலிருப்போர் நலன் கருதி தன்னைக்கடந்து பிறருக்கு உதவுதல் இதன் சிறப்பு.

தமிழர் மரபிலும் மனித பருவநிலை மாற்றங்கள் வகைப்படுத்தப்படாமலில்லை. குறிப்பாக தமிழர்கள் ஆண் பெண் இருவருக்கும் வெவ்வேறு பருவப் பெயர்களை கொண்டிருந்தது தமிழரின் - தமிழின் சிறப்பு. ஆணின் பருவநிலைகள் முறையே பாலகன் (1-12 வயது), விடலை (12-24 வயது), காளை (24-36), மீளி (36-48), மறவோன் (48-60), திறவோன் (60-72) மற்றும் முதுமகன் (72 வயதிற்கு மேல்) என்றும்; பெண்ணின் பருவ நிலைகள் முறையே பேதை (1-8 வயது), பெதும்பை (9-10 வயது), மங்கை (11-14 வயது), மடந்தை (15-18 வயது), அரிவை (19-24 வயது), தெரிவை (25-29 வயது) மற்றும் பேரிளம் பெண் (30 வயதுக்கு மேல்). ஆனால், உலகளாவிய அளவில் ஆண்-பெண் இருவருக்கும் பொதுவாகவே அமையப்பெற்றுள்ள வளர்சிதை மாற்ற வகைகளான 1. கருநிலை (Prenatal Stage), 2. மழலைப் பருவம் (Infancy), 3. குழந்தைப் பருவம் (Childhood), 4. பதின்ம பருவம் (Adoloscence) மற்றும் 5. ஆள் பருவம் (Adulthood) நாம் கருத்தில் கொள்வோம்.

## 2.2 அறிவுத்திறன் மற்றும் உணர்வுத்திறன் மேலாண்மை

1904-ஆம் ஆண்டில் பிரெஞ்சுக் கல்வித்துறை வழக்கமான பள்ளி கற்பித்தல் முறைகளில் சிறந்த பலன் தருமளவிற்கு கற்றுக்கொள்ள இயலாத குழந்தைகளைக் கண்டறியும் வழிமுறையொன்றைக் கண்டுபிடிக்கும்படி பிரெஞ்சு உளவியல் அறிஞர் ஆல்பிரெட் பினெட்டி (1857 – 1911)-யைக் கேட்டுக்கொண்டது. இதன் வழியாக அக்குந்தைகளைப் பிரித்தெடுத்து தனிக்கவனம் செலுத்தி கற்பிக்க வேண்டும் என்பதே அரசின் விருப்பமாக இருந்தது. இதற்காகத் தன் உடனுழைப்பாளர் தியோடர் சைமனுடன் இணைந்து ஆல்பிரெட் உருவாக்கியது தான் நுண்ணறிவுத்திறன் சோதனை (IQ Test). இது பின்னாட்களில் மெருகேற்றப்பட்டு உலகெங்கிலும் பிரசித்திபெற்றது. குறிப்பாக முதல் உலகப் போரின்போது படைவீரர்களைத் தெரிவுசெய்ய இது மிகவும் பயனுள்ளதாக இருந்தது. இன்றளவும் பல்வேறு வகைகளில் பல்வேறு நிறுவனங்களினால் தங்களின் உறுப்பினர்களின் நுண்ணறிவு, தர்க்கமுறை, செயலாற்றும் ஆற்றல் மற்றும் பிரச்சனைகளைச் சமாளிக்கும் திறன் போன்றவற்றைக் கண்டறியப் பயன்படுகிறது.

ஆனால், அறிவு ஜீவிகளாகத் திகழ்ந்து சாதனைபடைத்த பலரும் தங்களின் தனிப்பட்ட வாழ்வில் (திருமண, குடும்ப வாழ்வில்) தோல்வியைத் தழுவியிருந்தது 1980களில் கண்டுபிடிக்கப்பட்டது. குடும்பங்களில் பிரச்சனைகள் வருகின்ற பொழுது அவர்களால் சமாளிக்க முடியவில்லை, உடைந்துபோனார்கள். குடும்ப உறவுகளில் வெற்றிகொள்ள வெறும் அறிவு மட்டும் போதாது என்பது உணரப்பட்டு 1995-ல் டேனியல் கோல்மன் எனும் அமெரிக்க அறிவியல் இதழியலார் மற்றும் உளவியல் அறிஞர் அறிமுகம் செய்ததுதான் நுண்உணர்வு மேலாண்மை (Emotional Quotient = EQ).

சுய விழிப்புணர்வு, சமூக விழிப்புணர்வு, சுய நிர்வாகம் மற்றும் சமூக உறவு நிர்வாகம் எனும் நான்கு கால்வட்டங்களில் உணர்வறிவு விளக்கப்படுகிறது. 'தன்னை அறிந்தால் தரணி ஆளலாம்' என்னும் பழமொழிக்கிணங்க ஒருவர் தன் உணர்வுகளைப் புரிந்து செயலாற்றும் திறனை இது வளர்க்கிறது. வாழ்வின் ஏற்றத்தாழ்வுகளையும், மாறுபடும் மனித மனங்களையும் காலச்சூழல்களையும் எதிர்கொள்ள உணர்வு முதிர்ச்சி அவசியமாகிறது. இவற்றையும் கடந்து ஆன்மீக நுண்ணறிவு (Spirtual Quotient) மற்றும் இயற்கை நுண்ணறிவு (Natural Quotient) போன்றவை வளர்ந்துவரும் மற்ற கோட்பாடுகளாகும்.

## 2.3. குழந்தை வளர்ப்பின் தொடக்க நிலை:

பருவ நிலை மாற்றம் என்பது இயற்கையாக நிகழக்கூடியது. இது இயற்கையில் மட்டுமல்ல மனிதரிலும் நடபெறுகிறது. தம்பதிகள் பெற்றோராக உணரும் பொழுது உடலளவிலும் மனதளவிலும் பல்வேறு மாற்றங்களையும் உணர முடியும். குறிப்பாக பெண்கள் தாய்மை அடையும் போது ஏற்படும் உடல் மாற்றங்களான உறுப்புகளில் மாற்றம், இரத்த ஓட்ட மாறுதல், உடல் எடை மாற்றம், ஜீரண, வெப்பநிலை மாற்றம் போன்றவை மனதளவிலும் மாற்றங்களை எற்படுத்தக் கூடும். இவற்றைத் தம்பதிகள் புரிந்துகொண்டு, ஏற்றுக்கொண்டு, ஐயம் ஏற்படின் மருத்துவரைக் கலந்தாலோசித்து தங்களின் மன நெருக்கம் குறையாமல் பாத்துக்கொள்வது அவசியம். தம்பதிகளின் மன ஒற்றுமை தான் குழந்தைகளின் எல்லா வளர்ச்சி நிலைகளிலும் ஆரோக்கியமான சூழலை உருவாக்க இயலும். குழந்தைகளின் எல்லா நிலைகளிலும் பெற்றோரின் உடனிருத்தலும் வழிகாட்டலும் அவசியமென்றாலும், தொடக்க நிலையில் அவர்கள் கொடுக்கும் உறுதியான அடித்தளமே இறுதிவரை ஒரு குழந்தையின் வாழ்வில் செயலாற்றுவதாக அமைகிறது. "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?" என்பது பலருக்கு கேள்வியாகவும் சிலருக்கு சவாலாகவும் கூட இருக்கலாம். ஆனால், பிஞ்சுப்பருவத்தில் எது விதைக்கப்படுகின்றதோ அது பசு மரத்து ஆணிபோல் உறுதியாகவும் ஆழமாகவும் பதிகிறது என்பது நடைமுறை உண்மையே. இதனடிப்படையிலேயே, பிஞ்சுகளின் உணர்வு வளர்ச்சியில் பெற்றோர்களின் உரிமையும் கடமையும் இங்கு விவரிக்கப்படுகின்றன.

### 2.3.1. கருவில் வளரும் குழந்தை

ஒரு பெண் தான் கருவுற்றிருப்தாக உணரும் தருணத்தில் அவளுக்குள் ஒரு புதிய உயிர் வளரத் தொடங்கியிருக்கிறது. ஏனெனில், ஆணின் விந்து பெண்ணின் கருமுட்டையுடன் ஃபலோபியன் குழாயில் இணைந்து கரு உண்டாகிறது. இதுவே, கருத்தரித்தல் எனப்படுகிறது. கருத்தரித்த 30 மணி நேரத்திற்குள் முதல் செல் பிளவு ஏற்படுகிறது. கருத்தரித்த 6-லிருந்து 12 நாட்களுக்குள் ஃபல்லோபியன் குழாயிலிருந்து கரு நகர்ந்து கர்ப்பப்பையின் உட்சுவரில் பதிந்துவிடுகிறது. இரண்டு முதல் நான்கு வாரங்களுக்குள் இதயம், எலும்புகள், சிறுநீரகம், தசைகள், இரத்த அமைப்புகள் உருவாகின்றன. மூளை மூன்று பகுதியாகப் பிரிகிறது, சுவாச அமைப்புகள் வளர்கின்றன, இதயம் வளரத் தொடங்குகிறது. ஐந்து வாரங்களில் நிரந்தரமான சிறுநீரகங்களும், ஏழு வாரங்களில் உடல் அசைவுகளும் ஏற்படுகின்றன. 12 வாரங்களில் உடல் எடை கனிசமாக அதிகரித்து, 24 வாரங்களில் கண் இமைகள் வளர்ந்து கண் சிமிட்டத் தொடங்குகிறது; 28 வாரங்களில் ஒலியின் ஏற்றத்தாழ்வுகளை இனம் பிரித்தறிகிறது (இக்காலகட்டத்தில் வளைகாப்பு நடத்தி வளையல் அணிவிக்கும் வழக்கத்தினால் வளையலோசை வழியாக குழந்தையின் செவித்திறன் அதிகரிக்கிறது); 36 வாரங்களில் சிசு பிரசவத்தைத் தொடங்குகிறது.

கருவில் இருக்கும் குழந்தை மிகச்சிறந்த கவனிப்பாளியாக இருக்கிறது என்பது உளவியலார் கூற்று. தனது உணவு, சுவாசம் மற்றும் புரதச் சத்துக்கென நச்சுக்கொடி வழியாக தாயோடு இணைக்கப்பட்டுள்ள குழந்தை, தாயின் எல்லா உணர்வு நிலைகளையும் புரிந்துகொள்வதாகிறது. தாயின் உள்ளம் மகிழ்ச்சியாக இருந்தால் குழந்தையின் வளர்ச்சி ஆரோக்கியமானதாக இருக்கும்,

தாயின் உள்ளத்தில் சோகம், வெறுப்பு, பகைமை போன்ற எதிர்மறை உணர்வுகள் அதிகமிருந்தால் அது சிசுவின் ஆளுமையை மட்டுமல்ல உடல் வளர்ச்சியைக் கூட பாதிக்கலாம். ஒரு வேளை தாய்க்கு இக்குழந்தை வேண்டாத குழந்தையாக கருவில் தங்கிவிட்டால், குழந்தை பிறந்த பிறகு அதன் உலக வாழ்வின் ஏதாவது ஒரு சூழலில் தற்கொலை போன்ற ஆபத்தான மனநல நோய்களுக்கு ஆளாகக்கூடும். எனவே, கருவில் வளரும் குந்தையின் ஆரோக்கியமான வளர்ச்சியென்பது தாயின் பொறுப்பாகிறது. ஆனால், அத்தாயின் மனநிலையச் சீராக பாதுகாப்பது அவளைச் சுற்றியுள்ள அவளின் நெருங்கிய சொந்தங்கள் குறிப்பாக அவளின் கணவனின் பொறுப்பாக இருக்கிறது. “ஊரான் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானாய் வளரும்” என்ற பழமொழி இங்கு மிகச்சரியாகப் பொருந்துகிறது. ஒரு கணவனானவன் இன்னொருவரின் பிள்ளையாகிய தன் மனைவியை, சிறப்பாக அவள் கருவுற்றிருக்கும் காலத்தில், அன்புடனும் ஆரோக்கியத்துடனும் கவனித்துக்கொண்டால், அவள் வயிற்றில் வளரும் தன் பிள்ளை நன்றாய் வளரும் என்பது உண்மையே.

இந்நிலையில் கணவரின் உடனிருப்பும், உடல் நெருக்கமும், அன்புச் செயல்பாடுகளும் மனைவிக்கு பேறுகாலம் குறித்த தேவையற்ற அச்சத்தை குறைத்து, அவரின் பாதுகாப்புணர்வையும் தன்னம்பிக்கையையும் அதிகப்படுத்தும். ஆனால், உடலுறவைக் குறித்து கவனமாயிருக்க வேண்டும். குறிப்பாக கரு உருவான முதல் 12 வாரங்களில் உடலுறவு கருச்சிதைவுக்கு வழிவகுக்கக் கூடும்; அதுபோல் கடைசி இரண்டு வாரங்களில் உடலுறவென்பது குறைப்பிரசவம் எற்படக் காரணமாகிவிடும். எனவே, இக்கால கட்டங்களில் உடலுறவைத் தவிர்த்த அன்புச் செயல்களில் ஈடுபட வேண்டும். இடைப்பட்ட காலங்களில், மருத்துவரின் ஆலோசனையின் படி, வேறு எந்த மருத்துவ சிக்கல்களும் இல்லாத பட்சத்தில், பரஸ்பர சம்மதத்துடன் உடலுறவில் ஈடுபடலாம். கட்டாயப்படுத்தியோ, கணவனின் முழு எடையும் மனைவி மீது விழும் விதத்திலோ உடலுறவு கொள்ளுதலையும் அறவே தவிர்க்க வேண்டும்.

## 2.3.2. பிறந்த முதல் ஒன்பது மாதங்களில்:

குழந்தை பிறந்த முதல் ஒன்பது மாதங்களில் ஒவ்வொரு மாதத்திலும் கவனிக்கத்தக்க மாற்றங்கள் நிகழ்கின்றன. அவை முறையே: 1) தலை நிமிர்த்தும், நெற்றி சுருக்கும், உதடு மடிக்கும்; 2) சில எழுத்துக்களுக்கான ஒலி எழுப்பும், கண்ணீர் வரும்; 3) புரளும், நழுவும், பற்றிப் பிடிக்கும்; 4) தலை உறுதியாகும், தசை நார்கள் முறுக்கேறும், கால்கள் உதைத்தலில் உறுதி இருக்கும்; 5) பழக்கமான ஆட்களை அறிந்துகொள்ளும்; 6-9) சிரிக்கும், பாதங்களைப் பிடித்து விளையாடும், உட்காரும், தவழ முயலும், சப்தங்களில் மகிழும். இக்காலத்தில் முத்தடுப்பு ஊசி (தற்போது சிக்ஸர் டோஸ்), இளம்பிள்ளை வாத சொட்டு மருந்து, அம்மை குத்துதல் போன்ற மருத்துவ தேவைகளை நிறைவு செய்திருக்க வேண்டும்.

இக்காலகட்டத்தில் குழந்தை அனைத்தையும் வாயினால் சுவைத்து இன்புறுகிறது. அது போல பசி, தூக்கம், மலம் கழித்தல் எனத் தன் அனைத்து தேவைகளையும் அழுகையின் மூலமே தெரிவிக்கிறது. குழந்தைக்கு தாய்ப்பாலும், தாயின் அரவணைப்பும் மிக அவசியமாகிறது. தாய்ப்பால் புரத, கால்சிய சத்துக்களைத் தருவதோடு நோய் எதிர்ப்பு சக்தியைக் கூட்டுகிறது, உடல் வெப்பநிலையை சீராக்குகிறது. தன் தேவைகளை அன்புடனும் கரிசணையுடனும் நிறைவேற்றும் அந்த நபரைத் தன் தாயாகப் பார்ப்பதோடு, அவரிடம் பாதுகாப்பையும் உணர்கிறது. இதனாலேயே, முதல் ஒன்பது மாதங்கள் தாயின் அரவணைப்புக் காலம் எனப்படுகிறது. “அவளும் நானும் ஒன்று, அவள் என்னில் ஒரு பகுதி” -என குழந்தை தாயைத் தனது நீட்சியாகக் கருதுகிறது. தாயின் அரவணைப்பு குறைந்தாலோ அல்லது அவள் அருவறுப்புடன் பணி செய்தாலோ குழந்தை பாதுகாப்பற்ற தன்மையை உணர்கிறது. இதனால், வளர வளர தாழ்வு மனப்பான்மை, தன் மீதே வெறுப்பு கொள்ளுதல், யாருடனும் பழகாமல் விலகியிருத்தல், நம்பாமை, புறனி பேசுதல் இவற்றோடு பாலியல் குறைபாடுகள்

என குழந்தையின் வளர்ச்சியையும் ஆளுமையையும் பாதிக்கின்ற காரணிகள் உருவாகின்றன. இவற்றைத் தடுக்க முதல் ஒன்பது மாதங்களில் குழந்தைக்கு தாயின் உடனிருப்பும் அரவணைப்பும் மிக அவசியமாகிறது.

### 2.3.3. பிறந்த 9 முதல் 18 மாதங்கள்:

இந்நிலையில் குழந்தை கை பிடித்துக்கொண்டு நிற்கப்பழகும், வார்த்தைகள் பேசப் பழகும், தானாக தண்ணீர் குடிக்கும், தன் பெயரை அறியும். இந்நிலையிலும் தாய்ப்பால் நல்லது எனினும் பிற உணவுகளையும் பழக்க வேண்டிய காலம். தாய் தன்னைப்போல பாதுகாப்பளிக்கக் கூடிய, தனக்கு மிகவும் நெருக்கமான தந்தையை குழந்தைக்கு அறிமுகம் செய்துவைக்க வேண்டிய காலம். தந்தை அருகில் தூங்குவது, தந்தை தோள்களில் சாய்த்துக் கொண்டு நடப்பது எனத் தன் உடனிருப்பைக் காட்டவேண்டிய காலம். எனவே, இது தந்தையின் அரவணைப்புக் காலம் எனப்படுகிறது. இக்கால கட்டத்தில் தந்தையானவர் தன் மனைவிக்கும், குழந்தைக்கும் உடனிருந்து அன்பையும் பாதுகாப்பு உணர்வையும் வழங்குவது அவசியம். இந்த அரவணைப்பு குறையும் போது அதிக விமர்சனம் செய்தல், கஞ்சத்தனம், புலம்புதல், இயல்பற்ற நிலை போன்ற பிரச்சனைகளினால் பின்னாளில் குழந்தை அவதிப்பட அதிக வாய்ப்பிருக்கிறது.

### 2.3.4. பிறந்த 18 முதல் 36 மாதங்கள்:

இப்பருவத்தில் குழந்தைகள் சிறுநீர், மலம் கழிப்பதில் இன்பம் காண்பார்கள். குறித்த நேரத்தில் சிறுநீர் கழிக்கவோ, மலம் கழிக்கவோ கற்றுக்கொடுத்து பழக்கப்படுத்த வேண்டியது அவசியம். இதில் கடுமை காட்டினாலோ, முகம் சுளித்தாலோ இயல்பாக மலம் கழிப்பதை குழந்தைகள் தவிர்த்து அடக்கி வைக்க முயலுவார்கள், மலச்சிக்கல் பிரச்சனைகள் ஏற்பட்டு தவிப்பார்கள். பின்னாளில் அதிக சுத்தம் பார்ப்பவர்களாகவோ அல்லது சுத்தம் பற்றிய கவலையே இல்லாதவர்களாகவோ மாறக்கூடும். “என் அம்மா, என் அப்பா, என் பாட்டி, என் வீடு…” என அனைத்தையும் சொந்தமாக பாவிக்கும் காலம் இது. குறிப்பாக குடும்ப உறுப்பினர்களோடு உறவை உணரும் காலம் (feeling of belonging). நெருங்கிய உறவினர்களை அறிமுகம் செய்துவைக்க வேண்டும், தூக்கப் பழக்க வேண்டும். இரண்டு குழந்தைகளுக்கு இடையில் கால இடைவெளி மூன்று ஆண்டுகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும்; அப்போது தான் சகோதர பாசம் வளரும். இந்த இடைவெளி கூடும் போது முதல் குழந்தை அடுத்த குழந்தையைத் தன் போட்டியாளராக, தன் உரிமைகளைப் பங்குபோட வந்த எதிரியாகவோ கூட பார்க்க நேரிடும். சரியான குடும்ப உறவுகள் கிடைக்காத குழந்தைகள் சுயநலம் மிக்கதாக, விடாப்பிடி தன்மை கொண்டதாக, அதிக கவலை கொண்டதாக வளரக்கூடும்.

### 2.3.5. பிறந்த 3 முதல் 6 ஆண்டுகள்:

குழந்தைகள் தங்களை அறியாமலேயே பாலுணர்வு கொள்ளும் காலமிது. இந்நிலையில் தங்கள் பாலுறுப்பைத் தொட்டு விளையாடுவதன் மூலம் இன்பம் காண்பார்கள். இதைப் பெற்றோர்கள் புரிந்துகொண்டு இயல்பான முறையில் அவர்களின் கவனத்தைத் திருப்ப வேண்டும் (உ.ம்.: உள்ளாடை அணிவித்தல், பொம்மைகளை விளையாடக் கொடுத்தல் போன்றவை). மாறாக, குழந்தைகள் பாலுப்பைத் தொடும் போது கையில் அடிப்பது, பொதுவில் சப்தமாகத் திட்டுவது போன்ற செயல்கள் எதிர்மறை உணர்வுகளையே ஏற்படுத்தும். இதனால், தவறான வழியில் இன்பம் அனுபவித்தல் அல்லது பாலியல் உணர்வே தவறானது எனும் கருத்தியல் உருவாதல் போன்ற சிக்கல்கள் உண்டாகும்; இது எதிர்கால மணவாழ்வையே பாதிப்பதாக அமையலாம். இப்பருவத்தில் ஆண் குழந்தை தன் தாயைத் தனது துணையாகவும் (Oedipus Complex), பெண் குழந்தைகள் தந்தையைத் துணையாகவும் (Electa Complex) உணர்ந்து, அவர்களோடு இருக்க வேண்டும், உறங்க வேண்டும் என விரும்புவார்கள்.

இதைப் பெற்றோர்கள் உணர்ந்துகொண்டு குந்தைகளின் தேவைக்கேற்ப நடந்துகொள்ள வேண்டும். குழந்தைகளை வைத்துக்கொண்டு (அவாகள் உறங்கிவிட்டார்கள் என நினைத்து) உடலுறவு கொள்வதைக் கண்டிப்பாக தவிர்க்க வேண்டும். இந்த எதிர் பால் அன்பு முறையாகக் கிடைக்கவில்லையென்றால் பிற்காலத்தில் எதிர் பாலின் மீது ஈர்ப்பே இல்லாமல் போகக்கூடும். குழந்தைகள் முன்பு சண்டையிடுவதையும் கண்டிப்பாக தவிர்க்க வேண்டும். தற்போதைய சூழலில் வீட்டிலிருந்தே பலர் வேலை செய்வதால் மடிக்கணினி, செல்லிட பேசி பயன்பாடுகள் தவிர்க்க இயலாததாகிறது. பல வேளைகளில் குழந்தைகளும் இத்தகைய ஊடகங்களில் கவனம் செலுத்துவது பெற்றோருக்கும் ஓய்வு கிடைத்தது போலத் தோன்றுகிறது. ஆனால், இது உடலளவிலும் மனதளவிலும் மிகப்பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தும். உயிருள்ள பெற்றோருக்கு உயிரற்ற கருவிகள் என்றுமே ஒரு மாற்றாக அமையாது, அமைத்துவிடவும் கூடாது. இந்த வயதுக் காலத்தை குழந்தைகளின் சமூக உறவுக்காலம் அல்லது உறவினர் அன்புக் காலம் என்றும் சொல்லலாம். அண்டை வீட்டார், தெருவிலுள்ளோர் என புதிய மனிதர்களோடு அறிமுகம் ஏற்படுத்தப்பட வேண்டும். இந்தப்பழக்கமே பிற்காலத்தில் சமூக அக்கறை கொள்வதற்கும், பணி செய்வதற்கும் ஆர்வத்தைத் தூண்டுகிறது. போதிய அளவில் புதிய அறிமுகங்கள் இல்லாமல் போனால் பின்னாளில் முற்சார்ப்பு எண்ணம், நான் யார்? எனும் குழப்பம், அவமான உணர்வு, உணர்வுகள வெளிப்படுத்த தெரியா நிலை போன்றவை உருவாகும்.

இந்த நிலைக்குப் பிறகு தான் குழந்தையின் கல்வி வாழ்க்கை ஆரம்பமாகி உண்மையான சமூக வாழ்க்கைக்குப் பழக்கப்படும். ஆசிரியர்கள் புதிய முன்மாதிரிகளாகத் தெரிவார்கள், ஆண்கள் ஆண்களோடு பழகுவதும், பெண்கள் பெண்களோடு பழகுவதுமான ஒரு பாலின உணர்வு ஏற்பட்டு தோழமை வளரும். எற்கனவே கற்றுகொண்டுள்ள சில பழக்கங்கள் மாற்றமடையும், சில பழக்கங்கள் தீவிரமடையும். குழுக்களில் நிகழும் கேலி செய்தல், இகழ்ந்து பேசுதல், ஒதுக்கி வைத்தல் போன்ற சூழல்களை மனத்திடத்துடன் எதிர்கொள்ள மேற்சொல்லப்பட்ட நிலைகளில் கற்றுக்கொண்டவை பேருதவியாக இருக்கும்.

## 2.4 பெற்றோர்களின் கனிவான கவனத்திற்கு:

### 2.4.1 மாற்று இல்லை

வேலை காரணமாகவோ அல்லது மனத்தாங்களினாலோ வேறு காரணங்களாலோ பிரிந்து வாழும் தம்பதிகள் குழந்தையின் வளர்ச்சியின் இக்கால கட்டத்தில் உடனிருக்க முடியாமல் ஒரு வெற்றிடத்தை உருவாக்கிவிடுகிறாாகள். இது குழந்தையின் எதிர்கால ஆளுமையை நிரந்தரமாக பாதிப்பதாகிறது. பெற்றோர்கள் உடனிருந்து கொடுக்க வேண்டிய இந்த அன்பை வேறு யாராலும் கொடுத்துவிட முடியாது என்பதை பெற்றோர்கள் கண்டிப்பாக உணர்ந்து செயல்பட வேண்டும். ஒவ்வொரு குழந்தை பிறப்பின் போதும் கணவன் மனைவி உடன் இருந்து தங்கள் பெற்றோர் கடமைகளை உரிமையுடன் செயலாற்றவேண்டிய அவசியத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்.

### 2.4.2 குணம் நாடி

தவிர்க்க இயலாத காரணங்களால் உண்டாகிவிட்ட வெற்றிடத்தை அல்லது குழந்தையின் வளர்ச்சியில் ஏற்பட்ட ஆளுமை மாற்றத்தை முழுமையாக குணப்படுத்த இயலாவிட்டாலும் ஓரளவு சரிசெய்திட வழிகளும் இருக்கின்றன. மருத்துவர்கள், உளவியல் ஆலோசகர்கள் இவர்களின் உதவியுடன் பரிமாற்றப் பகுப்பாய்வு (Transactional Analysis), ஆலோசனை சிகிச்சைகள் (Councelling Therapies) வழியாக பிற்காலத்தில் சில மாற்றங்களை உருவாக்க இயலும். எனினும் வந்த பின் காப்பதை விட வருமுன் காப்பது சிறந்தது.

### 2.4.3 ஆன்மீக வாழ்வு

திருமணத்திற்கு பிறகு குழந்தை வரம் வேண்டி கோவில்களுக்கு செல்கிற பல பெற்றோர்கள், குழந்தை பிறந்தபிறகு அதே குழந்தையைக் காரணம் காட்டி தாங்கள் கோவிலுக்கு செல்வதை, கடன் திருப்பலிகளில் பங்கேற்பதை தவிர்க்கிறார்கள். கோவிலுக்கு வருவதற்கு சில நடைமுறைச் சிக்கல்கள் இருந்தாலும் தம்பதிகள் தங்கள் வீட்டிலேயே குடும்ப செபம் சொல்லும் பழக்கத்தை உருவாக்கிக்கொள்ள வேண்டும். இது இறைத்துணையை நாட உதவுவதோடு மனபலத்தையும் அதிகரிக்கிறது; தம்பதிகளின் நெருக்கம் குறையாமல், நன்றியுணர்வுடன் வாழ வழிவகுக்கிறது. குழந்தையின் ஆன்மீகமும் பெற்றோரிடமிருந்தே கற்றுக்கொள்ளப்படுகிறது. எனவே, உரிய காலத்தில் குழந்தைக்கு தேவையான அருளடையாளங்களை வழங்குவதும் பெற்றோரின் கடமை (காண். தி.ச.867.§1). குழந்தை பிறந்த எட்டு நாட்களிலிருந்து 30 நாட்களுக்குள் திருமுழுக்கு வழங்கி தங்கள் குழந்தைக்கான இறை உறவையும், ஆன்மீக வாழ்வையும் மீட்பையும் வழங்க வேண்டும். இது குழந்தையின் ஆன்ம தடுப்பூசியாகிறது. வீட்டில் நான்கு சுவர்களுக்குள் முடங்கிவிடாமல் சமூக பழக்கத்திற்கும் இது வழிவகுப்பதாகும். "நாம் கடவுள் மீது அன்பு கொண்டுள்ளோம் என்பதில் அல்ல, மாறாக அவர் நம்மீது அன்பு கொண்டு தம் மகனை நம் பாவங்களுக்குக் கழுவாயாக அனுப்பினார் என்பதில்தான் அன்பின் தன்மை விளங்குகிறது (1யோவா.4:10) என்ற விவிலிய வாக்கிற்கிணங்க குழந்தையின் ஆன்மீக வாழ்வென்பது நமது விருப்பத்தை மட்டும் சார்ந்தல்ல என்பதை உணர்ந்து, பெற்றோர்கள் காரணமின்றி திமுழுக்கை தள்ளிப்போடக்கூடாது" என்பது திருத்தந்தையர்கள் கூற்று (காண்: Instruction, *Pastoralis actio* (1980), 19-20).

### 2.4.4 குழந்தை வேண்டாம் என்னும் எண்ணம்

"குழந்தை வேண்டாம் எனும் என்னம் உண்டா?" என்ற கேள்வி திருமணத்திற்கு முன் ஆய்வுப் படிவத்தில் இடம்பெற்றுள்ளது. (நான் பார்த்த அளவில்) அனைத்து மணமக்களுமே "இல்லை" என்பதையே இதற்கு பதிலாகத் தந்தார்கள். "எத்தனை குழந்தைகள் பெற்றுக்கொள்வீர்கள்?" என்று கேட்டால், அவர்கள் பரவலாக சொன்ன பதில் "ஒன்று அல்லது இரண்டு". ஆக, குழந்தை வேண்டாம் எனும் என்னம் அவர்களுக்கு இருக்கிறது ஆனால் இரண்டு குழந்தைகள் பிறந்த பிறகு என்பது தெளிவாகிறது.

'இரண்டாவது குழந்தைக்கு மேல் எப்போதும் வேண்டாம்' என்கின்ற என்னம் எப்படி தோன்றியது?. 'இன்றய பொருளாதார சூழலில் வளர்ப்பது கடினம்; தரமான கல்வி கொடுக்க வேண்டும்; உலக மக்கள் தொகை பெருக்கம்...' என பல காரணங்களைச் சொல்கிறார்கள். நமது முன்னோர்களிடம் குழந்தைப்பேறு குறித்து வினா எழுப்பினால் அவர்கள் தரும் பதில் "அது கடவுளின் செயல்", "கடவுளின் கொடை" என்பதாக இருக்கிறது. நவீன கல்வி இல்லை, நவீன மருத்துவம் இல்லை, இன்றுபோல் கார்ப்பரேட் வேலைகளோ அதிக ஊதியமோ இல்லை, எந்த 'நவீனமும்' இல்லை. ஆனால் அவர்கள் 4-5 முதல் 12-13 குழந்தைகளைக் கூட பெற்று வளர்த்தார்கள். "குழந்தைகள் கடவுளின் கொடை" என ஆழமாக நம்பினார்கள்; "நம்மை நம்பி இந்த உயிர்களை இறைவன் கொடுத்திருக்கிறான், அவர்களைப் பேணி வளர்க்கவேண்டியது நம் கடமை" என உணர்ந்திருந்தார்கள்; அவர்களுக்காக கடுமையாக உழைக்கவேண்டும் என்ற பொறுப்புணர்வு கொண்டிருந்தார்கள். இன்றைய தம்பதிகளிடையே "குழந்தைகள் கடவுளின் கொடை" என்கிற நம்பிக்கை குறைந்துள்ளது. "திருமணம் எனும் தொழிற்சாலையிலே மணமக்கள் பார்த்து உருவாக்கும் உற்பத்திப் பொருளே குழந்தை; அதை மிகச்சிறந்ததாக உற்பத்தி செய்து உலகுக்கு தர வேண்டும்" என்கிற என்னமே மேலோங்கியிருக்கிறது. (Children are not products but living gifts from God.) தங்களை "மலடன்" (ஆம்பளையா?), "மலடி" எனும் அவப்பெயரிலிருந்து காக்கவும், தங்களின் ஆசைக்கும் ஆஸ்திக்குமான வாரிசாக பார்க்கிறார்கள். தங்கள் வாழ்வையும், வசதி வாய்ப்புகளையும், பெருக்கிக்கொண்டு, பொறுப்புகளை

ஏற்க அஞ்சுகிறார்கள். (They are becoming more self centred and fear to take up responsibilities.) மேலும், நவீனத்தின் மாயைக்குள் சிக்கிக்கொண்டு அதிக குழந்தைப்பேறு கண்ணியமற்றது (indecent) எனவும் நினைக்கிறார்கள். இத்தகைய மாயைகளை உடைத்தெறிந்து "குழந்தகள் கடவுளின் கொடைகள், அவர்களை வளர்க்க வேண்டியது என்னுடைய கடமை" எனபதை ஒவ்வொரு தம்பதியும் ஆழமாக நம்பவேண்டும், அதற்குரிய பொறுப்புகளை ஏற்கத் துணிய வேண்டும். கடவுளின் படைப்பாற்றலில் நாமும் ஒத்துழைக்கிறோம் என்று மகிழ வேண்டும். கடவுள் மனமிறங்கி கொடுக்காவிட்டால் யாருக்கும் குழந்தைப்பேறு இல்லை. நம்மால் சுமக்க முடியாத சுமைகளை நம்மேல் அவர் எற்றுவதுமில்லை.

குழந்தைப் பேறு குறித்த உலக அரசியலையும், மருத்துவ வியாபாரத்தையும் இங்கு கருத்தில் கொள்ளவேண்டும். வளங்களிலேயே சிறந்த வளம் மனித வளமே! மண்ணைப் பொன் அக்கவும், கல்லைக் கட்டித் தங்கமாக்கவுமான எல்லா ஆற்றல்களையும் தன்னகத்தே உள்ளடக்கியது மனித சக்தி. எவரிடத்தில் இந்த மனித வளம் அதிகமுள்ளதோ அவரே உண்மையான பலசாலி. (பழைய ஏற்பாட்டின் எகிப்தில் இஸ்ரயேல் மக்களும், இன்றளவும் உலகலாவிய அளவில் வலுவான நிலையில் இருக்கும் இஸ்லாமியர்களும் இதற்கு சிறந்த உதாரணம்.) இதை உலக நாடுகள் நன்கு உணர்ந்ததால் தான், இந்தியா போன்ற மனித வளம் அதிகமுள்ள நாட்டைக் குறிவைத்து குடும்பக்கட்டுப்பாடு, கருத்தடை சாதணங்கள் என, மனிதப் பிறப்பை தடைசெய்யும் பணிகளுக்கு அதிக பொருளாதார உதவிகளைக் கொடுத்தார்கள். சொந்த மக்களின் எதிர்கால வாழ்வைக்குறித்து அக்கறைப்படாத, நம் காலத்தில் பணம் வந்தால் போதுமென நினைக்கும் நம் சுயநல அரசும், தலைவர்களும் குடும்பக்கட்டுப்பாட்டை விளம்பரப்படுத்தி பரவலாக்கினார்கள்; அதிக மக்கள் தொகை ஆரோக்கியமானதல்ல, நமது அன்றாட வாழ்வுக்கே ஆபத்தானது என்பது போன்ற மனநிலைகளை உருவாக்கிவிட்டார்கள். "ஒற்றுமையே பலம்" என்ற நிலையை மாற்றி "உன் சகோதரனே உன் போட்டியாளர்" என "வலுவுள்ளவன் வாழட்டும்" என்கிற 'காட்டு' தத்துவத்தை மனதில் பதித்துவிட்டார்கள்; இன்றய சமூகமும் மனதளவில் மலட்டுத்தன்மையை எட்டிவிட்டது; நவீன உணவுப் பழக்கமும் வாழ்க்கைமுறையும் உடலையும் மலட்டுத்தன்மைக்கு தள்ளிவிட்டது. இன்று எந்த அரசு சுவர்களிலும், தொலைக்காட்சியிலும் "நாமிருவர், நமக்கிருவர்", "நாமிருவர், நமக்கொருவர்" போன்ற எந்த குடும்ப கட்டுப்பாட்டு விளம்பரங்களையும் பார்க்க முடியாது, வானொலியில் கேட்கவும் முடியாது. அதற்கு மாறாக நவீன கருத்தரித்தல் மையம், I.V. Centres என குழந்தைகளைப் பெற்றுக்கொள்வதற்கான மருத்துவ விளம்பரங்களை அதிகமாகக் காணமுடியும். நமது நெல்மணிகள், மஞ்சள், வேம்பு என பலவற்றுக்கும் காப்புரிமை பெற்றுவிட்ட கார்ப்பரேட்டுகள் இனி நாம் பெற்றுக்கொள்ளும் குழந்தைகளுக்கும் காப்புரிமை பெறுவார்கள்; நாம் பணம் கொடுத்து குழந்தை பெற்றுக்கொள்ளலாம்.

குடும்பத்தைத் திட்டமிடுதல் தவறு என்று இங்கு சொல்லவில்லை. முறையாகத் திட்டமிட்டு காப்பாற்றுபவரே சிறந்த தலைவர் என்பதில் எள்ளவும் ஐயமில்லை. குழந்தை பிறப்பைத் தடுப்பது மட்டும் குடும்ப திட்டமிடல் அல்ல. இதற்கு சமூகம் முன் வைப்பது கருத்தடை சாதனங்களும், அறுவை சிகிச்சையுமே. குழந்தை பிறப்பை இயற்கையோடும் இறைவனோடும் இணைந்து திட்டமிடல் செய்ய வேண்டும். மனைவியின் இயற்கையான மாதவிடாய் சுழற்சியை அறிந்து வளமான நாட்கள், வளமற்ற நாட்களைத் தெரிந்து உடலுறவைத் திட்டமிடுகிறபொழுது, மனைவியும் மதிக்கப்படுகிறார், பாலியல் இன்பத்திலும் ஒரு சுய கட்டுப்பாடு உருவாகிறது. மாறாக, கருத்தடை சாதணங்கள் கட்டுப்பாடற்ற பாலுறவுக்கே வழிவகுக்கின்றன. திருமணத்தின் நோக்கத்தை பிளவுக்கு உட்படுத்துகிறது. (எனினும், தவிர்க்கமுடியாத காலத்தில், "தேவையற்ற கரு உருவாகி அதைக் கலைக்கவேண்டிய சுழல்" என்கிற மிகப்பெரிய சாவான பாவத்தைத் தவிர்ப்பதற்காக, கருத்தடை சாதணங்கள் (Contraceptives) எனும் அற்பப் பாவத்தை செய்துவிட்டு பாவமன்னிப்பு பெற்றுவிடலாம்.) குடும்பக் கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை என்பதும் தற்போது பரவலாக உள்ள செயல்பாடு. இரண்டாம் குழந்தை பிறந்தவுடன் இந்த சிகிச்சையையும் முடித்தே பெண்கள் வீடு திரும்புகிறார்கள். இதனை

வீட்டுப் பெரியவர்களும், மருத்துவர்களும், சமூகமும் பரவலாக ஏற்றுக்கொள்கின்றனர். ஆனால், குடும்ப கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை மேற்கொண்ட பெண்களின் உடலளவில் பின் விளைவுகள் ஏற்படுவது ஒருபுறமிருக்க, மனதளவிலும் குறிப்பாக கணவன்-மனைவி உறவுநிலைகளில் மிகப்பெரிய மாற்றங்கள் நிகழ்கிறது என்பதே உண்மை. கணவனுக்கு மனைவி மீது ஈர்ப்பும் மரியாதையும் குறைகிறது (*Humanae vitae*). இருவரிடையேயும் தேவையற்ற சண்டைகள், மன எரிச்சல்கள் அதிகமாகிறது. கையளித்தல், அன்பு செய்தல் என்ற நிலைகள் மறைந்து "ஏதோ பிள்ளைகளுக்காக சேர்ந்து வாழ்கிறோம்" என்ற மனநிலையே மேலோங்கி இருக்கிறது. குடும்பங்களில் உள்ள பல இனம்புரியாத பிரச்சனைகளின் பின் மறைந்துள்ள தத்துவம் இதுவே: "காலி பெருங்காய டப்பாவில் வாசனை இருக்கலாம், அனால் சமையலுக்கு உதவாதே!" எனவே, குடும்பக் கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை கண்டிப்பாக மேற்கொள்வதாக இருந்தால், தம்பதிகளுக்கு எனது அறிவுரை, ஆண் - பெண் இருவருமே செய்துகொள்ளுங்கள். அப்போது ஒருவர் மற்றவரை மீண்டும் புரிந்துகொள்ள முடியும், அன்பு குறையாது, பிறன் மனை நோக்காது. இவற்றிற்கெல்லாம் மேலாக திருஅவையின் போதனையையும் மறந்துவிடலாகாது. குடும்பக்கட்டுப்பாடு, கருத்தடை, கருச்சிதைவு போன்ற இயற்கைக்கு முரணான எதையும் திருஅவை இன்றளவும் ஏற்றுக்கொள்ளவில்லை (திருஅவையின் மறைக்கல்வி எண்: 2399).

## முடிவுரை

குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர். (குறள்:66)

வள்ளுவரின் இந்த வாக்கு குழந்தையின் மழலை மொழியின் மகத்துவத்தை வெளிப்படுத்துகிறது. குழந்தைப்பேறு ஒரு குடும்பத்தின் ஒப்பற்ற மகிழ்ச்சியாகவும், செல்வமாகவும் மட்டும் இல்லாமல், இச்சமூகத்தின் எதிர்காலமாகவும் இருக்கிறது. எந்த குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே, அது நல்லவராவதும் கெட்டவராவதும் அன்னை வளர்ப்பினிலே என்கிறது பழைய பாடல் ஒன்று. ஆனால், அது அன்னையின் வளர்ப்பு மட்டுமல்ல, தந்தையின் வளர்ப்பும் சேர்த்துதான். பெற்றோர் முதலில் என்ன விதைக்கிறார்களோ அதுவே பின்னாளில் உரமிட்டு வளர்க்கப்படுகிறது. பெற்றோர்களே குழந்தைகளின் முதல் ஆசான், அவர்களிடம் பார்த்து, கேட்டு, தொட்டு உணர்ந்ததிலிருந்து குழந்தைகள் கற்றுக்கொள்கிறார்கள். ஆகவே, பெற்றோர்கள் தங்கள் குழந்தையை மட்டுமல்ல இந்த சமூகத்தின் எதிர்காலத்தையே வளர்க்கிறோம் என்ற பொறுப்பை உணர்ந்து பொறுப்புள்ள பெற்றோராக திகழட்டும். பொறுப்புள்ள பெற்றோராகும் போது தம்பதிகளின் பரஸ்பர அன்பும் புதுப்பிக்கப்படுகிறது. இதனால், அவர்களின் திருமண பந்தம் இன்னும் ஆழமாகிறது, அர்த்தப்படுகிறது, உறுதிப்படுகிறது. "உண்மையில் குழந்தைகள் திருமணத்தின் ஆகச்சிறந்த பரிசாக மட்டுமில்லாமல், அதிக அளவில் பெற்றோரின் நலனிலும் பங்களிக்கிறார்கள் (*Humanae Vitae* 9)."